08.08.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாய கிணறுகளில் நீர் ஊற்று அதிகரிப்பு

தேனி: கோடை மழை தொடர்வதால் கிணறுகளில் நீர் ஊற்று அதிகரித்து வருகிறது. தேனி மாவட்டத்தில் முல்லை பெரியாறு அணையின் மூலம் 14 ஆயிரத்து 707 எக்டேர் நேரடி பாசனமும் 45 ஆயிரம் எக்டேர் மறைமுக பாசனமும் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பெய்த மழை காரணமாக மாவட்டத்தில் முல்லை பெரியாறு, வைகை, கொட்டகுடி, வராகநதி, சுருளியாற்றில் நீர் வரத்து இருந்தது. ஆற்றில் நீர் வரத்து தொடங்கியதும், மாவட்டத்தில் ஆற்றங்கரையோரம் உள்ள விவசாய கிணறுகளில் நீர் ஊறத்தொடங்கியது. இதன் மூலம் கிணற்று பாசனம், போர்வெல் பாசன நிலங்களுக்கு நீர் கிடைத்து, சாகுபடி நடந்து வருகிறது. தற்போது கோடை மழையும் தொடர்வதால், நீர் ஊற்று தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### கோடை சாகுபடிக்கு உரம் தயார்

தஞ்சாவூர்: தஞ்சை மாவட்டத்தில் கோடை மற்றும் குறுவை பருவத்தில், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, 2,660 மெட்ரிக் டன் யூரியா உரம், 1,330 மெட்ரிக் டன் பொட்டாஷ் உரம், தூத்துக்குடியிலிருந்து சரக்குரயில் மூலம், தஞ்சை மற்றும் கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷன்களை வந்தடைந்தது.ஏமன் நாட்டில் உள்ள உர நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்கள், கப்பல் மூலம் தூத்துகுடி துறைமுகம் வந்ததடைந்தது. அங்கிருந்து சரக்கு ரயில் மற்றும் லாரிகள் மூலம்,

ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் கோடை மற்றும் குறுவை பருவத்தில், நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, 2,660 மெட்ரிக் டன் யூரியா உரம், 1,330 மெட்ரிக் டன் பொட்டாஷ் உரம், தூத்துக்குடியிலிருந்து சரக்கு ரயில் மூலம் தஞ்சை மற்றும் கும்பகோணம் ரயில்வே ஸ்டேஷன்களுக்கு நேற்று காலை வந்தடைந்தது. இவை லாரிகள் மூலம், மாவட்டம் முழுவதும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

**கோடை மழையில் செழித்த தரைப் பீன்ஸ்**

தாண்டிக்குடி: தாண்டிக்குடி கீழ்மலைப் பகுதியில் கோடை மழை வெளுத்து வாங்கியதால் "தரை பீன்ஸ்' நன்கு செழித்து வளர்ந்துள்ளது. "பாரம் பீன்ஸ் (செலக்ஷன்), குத்துப்பீன்ஸ்' என அழைக்கப்படும் இவ்வகை பீன்ஸ்கள், புதர்மண்டிய நிலத்தை பக்குவப்படுத்தி பயிரிட்டால் பெருத்த லாபம் கிடைக்கும் என்பது மலைத் தோட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பு. இரண்டே மாதங்களில் அறுவடை செய்யலாம். சோனாலி, முருங்கை, பலூன், ரிங் போன்ற கலப்பின "ஹைபிரிட்'களின் வரவால் இவ்வகை பீன்ஸ் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்து விட்டனர். இந்த பீன்ஸ்களின் பராமரிப்பை பொறுத்தமட்டில் களையெடுப்பு, அடியுரமிடுதல் மட்டுமே பணி. ஒரு கிலோ பீன்ஸ் விதையில் அதிகபட்சமாக 300 கிலோ காய்கள் கிடைப்பதாகவும், மண்வளத்தை பாதுகாக்கும் இவ்வகை பீன்ஸ்க்கு மார்க்கெட்டில் நல்ல வரவேற்பும் உள்ளது.விவசாயி சுதர்சன் கூறியதாவது: ஒன்றை ஏக்கரில் இந்த பீன்ஸை பயிரிட்டுள்ளேன். ஆரம்பத்தில் புதர்மண்டிய நிலத்தை தூய்மைப்படுத்தி பீன்ஸ் பயிரிட்டு லாபமடைந்தனர். தற்பாது நோய் தாக்குதல், புதிய வகை பீன்ஸ்களின் வரவால் மறந்து விட்டனர். பராமரிப்பு குறைவாக உள்ள இவ்வகை பீன்ஸ் பயிரிட்டால் நல்ல வருவாய் ஈட்டுவதுடன் மண்ணையும் வளப்படுத்தலாம், என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**தெலங்கானாவில் ராகுல் 15 கி.மீ 'பாதயாத்திரை'; விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சி**



ஐதராபாத், காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி அடுத்த வாரம் தெலங்கானாவுக்கு செல்ல இருக்கிறார். விவசாய பிரச்சனை காரணமாக நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து வரும் நிலையில் அவர்களிடையே புதிய நம்பிக்கையை மலர்ச்சியடைய செய்வதற்காக வரும் 11, 12 தேதிகளில் தெலங்கானா விவசாயிகளை சந்திக்கிறார். அங்குள்ள அதிலாபாத் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளை சந்தித்துவிட்டு பாதயாத்திரையும் மேற்கொள்ள இருக்கிறார். இதுசம்பந்தமாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள விபரத்தில், 'ஐதராபாத் விமான நிலையத்திற்கு வரும் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வந்தடையும் ராகுல் காந்தி அங்குள்ள ஒஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்களுடன் உரையாடுகிறார். அதில் வேலைவாய்ப்பின்மை தொடர்பாக மாணவர்களிடம் 10 நிமிடங்கள் விவாதிக்கிறார். பிறகு, அதிலாபாத் மாவட்டத்திலுள்ள நிர்மல் பகுதிக்கு சென்று அங்கு இரவை கழிக்கிறார். மறுநாள் காலை வாடியாலா கிராமத்திலிருந்து 15 கி.மீ தொலைவிற்கு பாதயாத்திரை மேற்கொள்கிறார். பிறகு, அன்று மதியம் கொரடிக்கால் கிராமத்தில் விவசாயிகளுடன் சந்தித்து உரையாடிய பின்

மீண்டும் ஐதராபாத்திற்கு திரும்புகிறார். அங்கிருந்து டெல்லிக்கு புறப்படுவார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பருப்பு வகைகள் விலை மேலும் உயர்வு ஒரே மாதத்தில் கிலோவுக்கு ரூ.30 கூடியது**



சென்னை, வரலாறு காணாத வகையில் பருப்பு வகைகள் விலை மேலும் உயர்ந்துள்ளது. ஒரே மாதத்தில் கிலோவுக்கு ரூ.30 கூடியுள்ளது. பருப்பு வகைகள் தமிழ்நாட்டிற்கு துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, கடலை பருப்பு, பாசி பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகள் வட மாநிலங்களில் இருந்து கொண்டுவரப்படுகின்றன. மேலும், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு போன்றவை வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றன. தற்போது, வடமாநிலங்களில் பருப்பு வகைகள் விளைச்சல் குறைந்துள்ளதால், விலை அதிகரித்து வந்தது. ஆனால், ஆன்லைன் வர்த்தகத்துக்கு அனுமதி, பதுக்கல் காரணமாக செயற்கையான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதால், பருப்பு வகைகள் விலை வரலாறு காணாத வகையில் மேலும் அதிகரித்துள்ளது. அதாவது, ஒரு மாதத்தில் மட்டும் கிலோவுக்கு ரூ.30 கூடியுள்ளது. துவரம் பருப்பு - உளுந்தம் பருப்பு கடந்த மாதம் 100 கிலோ எடை கொண்ட துவரம் பருப்பு (முதல் ரகம்) மூட்டை ரூ.8,200-க்கு விற்பனையானது. தற்போது, ரூ.11,200 ஆக விலை அதிகரித்துள்ளது. அதாவது, ரூ.95-க்கு விற்பனையான ஒரு கிலோ துவரம் பருப்பு தற்போது ரூ.125 ஆக

உயர்ந்துள்ளது. 2-வது ரகம் துவரம் பருப்பு ரூ.85-ல் இருந்து ரூ.115 ஆக கூடியுள்ளது. தான்சானியா நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் துவரம் பருப்பு ரூ.75-ல் இருந்து ரூ.105 ஆக அதிகரித்துள்ளது. இதேபோல், கடந்த மாதம் 100 கிலோ எடை கொண்ட உளுந்தம் பருப்பு மூட்டை ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனையானது. தற்போது, ரூ.11,300 ஆக உயர்ந்துள்ளது. அதாவது, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ரூ.85-ல் இருந்து ரூ.120 ஆக கூடியுள்ளது. பர்மாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உளுந்தம் பருப்பு ரூ.75-ல் இருந்து ரூ.110 ஆக அதிகரித்துள்ளது. மேலும் விலை உயரும் அபாயம் இதேபோல், 50 கிலோ எடை கொண்ட கடலைப்பருப்பு மூட்டை ரூ.2,600-ல் இருந்து ரூ.3,300 ஆக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ கடலைப்பருப்பு (முதல் ரகம்) ரூ.55-ல் இருந்து ரூ.75 ஆகவும், 2-வது ரகம் ரூ.45-ல் இருந்து ரூ.65 ஆகவும் விலை கூடியுள்ளது. மைசூர் பருப்பு ஒரு கிலோ ரூ.60-ல் இருந்து ரூ.90 ஆகவும், உடைத்த கடலை (பொரி கடலை) ரூ.65-ல் இருந்து ரூ.95 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. ஆன்லைன் வர்த்தகம், பதுக்கல் போன்றவற்றை மத்திய அரசு விரைந்து தடுக்காவிட்டால் பருப்பு வகைகள் விலை மூட்டைக்கு ரூ.2 ஆயிரம் அதிகரிக்க அபாயம் உள்ளது என்றும், இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு வரலாறு காணாத வகையில் பருப்பு வகைகள் விலை உயர்ந்திருப்பது இதுவே முதல் முறை என்றும் தமிழ்நாடு அனைத்து மளிகை பொருட்கள் வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

**காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு பகுதியில் திடீர் மழை**



காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு பகுதியில் நேற்று திடீர் மழை பெய்தது.கோடை வெயில் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், குமராட்சி, சேத்தியாத்தோப்பு பகுதிகளில் கடந்த சிலநாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. கோடை காலத்தின் உச்சமான அக்னி நட்சத்திரம் கடந்த 4-ந் தேதி தொடங்கியது.இதையடுத்து தமிழகத்தின் பல மாவட்டங்களில் 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்துகிறது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை கடும் வெயிலால் அவதிப்படுகின்றனர். திடீர் மழை ஆனால் சிதம்பரம் பகுதியில் அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் இருந்தே வெயிலின் தாக்கம் குறைவாக உள்ளது. அவ்வப்போது வானில் மேகங்கள் திரண்டு, மிதமான தட்பவெப்பநிலை நிலவியது. இந்நிலையில் காட்டுமன்னார்கோவில், குமராட்சி, சேத்தியாத்தோப்பு பகுதியில் நேற்று பகலில் திடீரென்று வானில் கருமேகம் சூழ்ந்து மழை பெய்யத்தொடங்கியது. இந்த மழை காலை 11.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை பெய்தது. பெருக்கெடுத்து ஓடிய மழை நீர் இதனால் காட்டுமன்னார்கோவிலில் சாலைகள், தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. திடீரென்று பெய்த மழையால் பொதுமக்கள் நனைந்தபடி சாலையில் நடந்து சென்றனர். சிலர் கடைகளின் ஓரமாக மழைக்கு ஒதுங்கி நின்றதை காண முடிந்தது. சிதம்பரத்தில் மழைக்கான அறிகுறியாக இடி, மின்னல் இருந்தது. வானில் கருமேகங்கள் சூழ்ந்தது. ஆனால் மழை பெய்யாததால் மக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

**தூத்துக்குடியில் இருந்து தஞ்சை மாவட்டத்திற்கு 2,660 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது**



தூத்துக்குடியில் இருந்து தஞ்சை மாவட்டத்திற்கு 2,660 டன் யூரியா உரம் சரக்குரெயிலில் கொண்டு வரப்பட்டது.குறுவை சாகுபடி தஞ்சை மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நெல் சாகுபடி நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 45 ஆயிரம் எக்டேரில் குறுவை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு சாகுபடி பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் தேவைக்கு ஏற்ப வெளிமாநிலங்களில் இருந்தும், வெளி மாவட்டங்களில் இருந்தும் உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான யூரியா உரம் ஓமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டது. அப்படி இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரம் ஓமன் நாட்டில் இருந்து கப்பல் மூலம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது.அங்கிருந்து சரக்கு ரெயில் மூலம் தஞ்சை மாவட்டத்திற்கு யூரியா உர மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இந்த சரக்கு ரெயில் தஞ்சை மற்றும் கும்பகோணம் ரெயில் நிலையங்களுக்கு நேற்று வந்து சேர்ந்தன. தஞ்சை மற்றும் கும்பகோணத்திற்கு தலா 21 வேகன்களில் தலா 1,330 டன் யூரியா உரம் வந்திருந்தது. பின்னர் சரக்குரெயிலில் இருந்து யூரியா உர மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள தொடக்க

வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. இந்த உரம் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வினியோகம் செய்யப்படும்.இது குறித்து கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:-தேவையான உரம் இருப்பு தஞ்சை மாவட்ட விவசாயத்திற்கு தேவையான யூரியா உரம் ஓமன் நாட்டில் இருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டு, அங்கிருந்து சரக்குரெயில் மூலம் தஞ்சை மற்றும் கும்பகோணத்திற்கு கொண்டு வரப்பட்டது. தஞ்சைக்கு 1,330 டன் யூரியா உரமும், கும்பகோணத்திற்கு 1,330 டன் யூரியா உரமும் என மொத்தம் தஞ்சை மாவட்டத்திற்கு 2,660 டன் யூரியா உரம் வந்துள்ளது. இந்த உரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட உள்ளது. மேலும் விவசாயிகளுக்கு தேவையான டி.ஏ.பி. உரமும் கூட்டுறவு விற்பனை இணையத்தில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி 1,330 டன் பொட்டாஷ் உரம் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 21 வேகன்கள் மூலம் கும்பகோணத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த உரமும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட உள்ளது. அதுமட்டுமின்றி விவசாயத்திற்கு தேவையான காம்ப்ளக்ஸ் உரமும் சேமிப்பு கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு தேவையான உரம் தட்டுப்பாடு இன்றி கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதனால் உரம் தட்டுப்பாடு தஞ்சை மாவட்டத்தில் வர வாய்ப்பு இல்லை.இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**வாழை வணிக வளாகத்தில் 853 வாழைத்தார்கள் ஏலம்**

திருச்சி, : திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் 853 வாழைத்தார்கள் ஏலம் போனது.ஏலம் விடப்பட்ட 853 வாழைத்தார்களுக்கும் எந்தவித தரகுமின்றி அன்றே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. கிளியநல்லூர், சிறுகாம்பூர், கொப்பாவளி, கூகூர், திருமங்கலம், அப்பாத்துறை, தண்டாங்கோரை, லால்குடி, சென்னக்கரை, குழுமணி, சோமரசம்பேட்டை, வயலூர், ஆமூர், தொட்டியம், வாத்தலை, செங்குடி, ஜீயபுரம், அதவத்தூர் ஆகிய கிராமங்களிலிருந்து 30 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். பெருகமணி, சிறுகமணி, ஜீயபுரம், கடியாக்குறிச்சி, புத்தூர், கே.கே.நகர், ஏர்போர்ட், சீத்தலைவாய், அரியாவூர், குளித்தலை, நம்பியூர், அண்ணாநகர் ஆகிய ஊர்களிலிருந்து மொத்தம் 16 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.81,440 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது.இதில் ரஸ்தாலி அதிகபட்சமாக ரூ.205க்கும், பூவன் ரூ.175க்கும், பச்சலாடன் தார் அதிகபட்சமாக ரூ.205க்கும், மொந்தன் ரூ.175க்கும், ஏலரசிதார் அதிகபட்சமாக ரூ.120க்கும், பேயன்தார் அதிகபட்சமாக ரூ.115க்கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் மே 12ம் தேதி நடக்கும். மாவட்டத்தில் திடீர் மழை கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரியில் நேற்று பெய்த திடீர் மழையால், குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதியில், நேற்று காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று பிற்பகல்

சரியாக 3 மணிக்கு திடீரென வானம் இருண்டது. அத்துடன் இடி, மின்னலுடன் மழை பெய்ய துவங்கியது. இதனால் சாலையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் சாலையோரம் கடை வைத்திருந்த காய்கறி கடைகாரர்கள், கடைகளை அவசர கோலத்தில் எடுத்து வைத்தனர். இந்த மழையால் குளிர்காற்று வீச துவங்கியது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**அமராவதி சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை துவங்கியது**

உடுமலை, : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை நேற்று துவங்கியது. எம்எல்ஏ சண்முகவேலு துவக்கி வைத்தார். உடுமலையை அடுத்துள்ள மடத்துக்குளம் கிருஷ்ணாபுரத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. இங்கு ஆண்டுதோறும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் கரும்பு அரவை துவங்கும். டன் கணக்கில் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும். இந்த ஆண்டு அரவைக்காக கடந்த 22ம் தேதி பாய்லர் இளஞ்சூடேற்றும் நிகழ்ச்சி நடந்தது. எம்எல்ஏ சண்முகவேலு துவக்கி வைத்தார். அதைத்தொடர்ந்து நேற்று முதல் கரும்பு அரவை துவங்கியது. கரும்பு அரைக்கும் எந்திரத்தை துணை சபாநாயகர் பொள்ளாச்சி ஜெயராமன், எம்எல்ஏ சண்முகவேலு ஆகியோர் இயக்கி அரவையை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர் இந்துமதி,தொழிலாளர் நல அதிகாரி நவநீதன், உடுமலை நகராட்சி துணைத்தலைவர் கண்ணாயிரம், கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் வேலுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். இன்று அரவைக்குள்ளாகும் கரும்பு சில நாட்கள் பிராசசிங் முடிந்து சர்க்கரையாக கொட்டும். சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர் இந்துமதி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், ஆலையில் கரும்பு அரவை இனிதாக துவங்கியது. இந்தாண்டு 75ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. ஆலைக்கு பதிவு செய்யாத

விவசாயிகளும் கரும்பை கொடுத்து அரவை திறனை அதிகரிக்க செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுளளார்.மீண்டும் நடத்த விவசாயிகள் கோரிக்கை குறைகளை தீர்க்க உழவர் பெருவிழா

திருவள்ளூர், : விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, மீண்டும் உழவர் பெருவிழா நடத்தப்படுமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.விளை பொருட்களை சந்தைப்படுத்த, தற்போதுள்ள விரிவாக்க முறையை முறைபடுத்தி, இரண்டாம் பசுமை புரட்சியின் இலக்கான இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற குறிக்கோளை அடைய, உழவர் பெருவிழா மற்றும் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் தொடர்பான கையேடு வெளியிடப்பட்டது. இதன்படி, கடந்த 2012ம் ஆண்டில், ஒரு மாதம் உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. வட்டாரம் வாரியாக நடந்த உழவர் பெருவிழாவில், விவசாயிகளை அழைத்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்பட்டது. விவசாயிகளின் கிராமங்களுக்கு களப்பணியாளர்கள் சென்று வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான தொழில்நுட்ப செய்திகளை வழங்குவர். பயிரின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்திட பயிர் பாதுகாப்பு ஆலோசனைகள் வழங்கப்படும். பருவத்துக்கு ஏற்றபடி சாகுபடி செய்யும் பயிர்களில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்ப செயல்முறையை குழுவினர் செய்து காண்பிப்பர். முக்கியமான தருணங்களில், வேளாண் விஞ்ஞானிகளை வயல்களுக்கு அழைத்துச் சென்று இடர்ப்பாடுகளுக்கு தீர்வு காணப்படும். விவசாயிகளின் விளை பொருளை சந்தைப்படுத்துதல் குறித்த ஆலோசனை வழங்கப்படும். 15 நாட்களுக்கு ஒருமுறை வரும் களப்பணியாளர்களை தொடர்பு கொண்டு, சாகுபடி செய்யும் பயிர்களுக்கான தொழில் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக உழவர் பெருவிழா நடத்தப்படவில்லை. களப்பணியாளர்கள் நேரடியாக செல்வதில்லை

என்ற புகார் எழுந்துள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறுகையில், நீர் தேவை, மின் தேவை, விவசாய பொருட்களின் விலை ஆகியவற்றுக்காக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உழவர் பெருவிழா நடத்தவில்லை. நீர் சிக்கனம், விவசாய உற்பத்தி பெருக்குதல் போன்றவைக்காக மீண்டும் உழவர் பெருவிழா நடத்தப்பட வேண்டும். உழவர் பெருவிழா நடத்துவதன் மூலம் விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்றனர்.

**பண்ணைக்குட்டைகள் அமைத்தால் நிலத்தடி நீர் மட்டம் உயரும் வேளாண் அதிகாரி தகவல்**

சேதுபாவாசத்திரம், : பண்ணைக்குட்டைகள் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயருவதுடன் உபரி வருமானமும் பெறலாம் என சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: நடப்பு கோடை பருவத்தில் பண்ணைக்குட்டைகள் அமைப்பதன் மூலம் குறைந்த நீர் தேவையுடைய பயிர்களை சாகுபடி செய்தும் காய்கறிகள், பூக்கள் போன்ற தோட்டக்கலை பயிர்களையும், கால்நடைகளுக்கு தேவையான புல் கரணைகளையும் பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம். மேலும் பண்ணைக்குட்டைகளில் நாட்டு ரக மீன் வகைகளை வளர்த்து லாபம் பெறலாம். குட்டைக்கு மேலே சிறிய குடில்கள் அமைத்து கோழிகள் வளர்த்து அதன் எச்சங்களை மீன்கள் உணவாக எடுத்துக்கொண்டு வளர்வதற்கு கோழிகள் மற்றும் புறாக்கள் வளர்த்து உபரி வருமானம் பெறலாம். கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக கடைமடை பகுதியில் பருவமழை இன்றி நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வரும் நிலையில் பண்ணைக்குட்டைகள் அமைத்து தற்போது பெய்யத் தொடங்கியுள்ள மழைநீரினை தேக்கினால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயருவதுடன் உபரி வருமானமும் பெறலாம் என்று செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயப் பயிற்சி முகாம்**

காலாப்பட்டு பண்ணை தகவல் மையம் சார்பில், தென்னையில் நுண்ணூட்டச்சத்து இடுதல் பற்றிய செயல் விளக்க முகாம் கனகசெட்டிக்குளத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.உழவர் உதவியக வேளாண் அலுவலர் டி.அனுப்குமார் வரவேற்றார். ஆத்மா துணை திட்ட இயக்குநர் எஸ்.சந்தானகிருஷ்ணன், தென்னை வளர்ப்பு, அதன் முக்கியத்துவம், நன்மைகள் பற்றி பேசினார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் ஆதித்தன், தென்னையில் நுண்ணூட்டச்சத்து இடும் முறை குறித்து செயல் விளக்கம் அளித்தார். முகாமில் பங்கேற்ற தென்னை விவசாயிகளுக்கு தலா இரண்டு கிலோ நுண்ணூட்ட உரம் வழங்கப்பட்டது. 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் நாராயணசாமி, கிராம விரிவாக்க பணியாளர் பழனி ஆகியோர் செய்திருந்தனர்.

**உயர் ரக பிஸ்கட் விற்பனையில் கூடுதல் கவனம்: பார்லே நிறுவனம்**

உயர் ரக பிஸ்கட் விற்பனையில் கூடுதல் கவனம் செலுத்தப் போவதாக பார்லே புராடக்ட்ஸ் நிறுவனம் தெரிவித்தது. இது தொடர்பாக அந்த நிறுவனத்தின் விற்பனைப் பிரிவுத் துணைத் தலைவர் ஷாலின் தேசாய் புது தில்லியில் வியாழக்கிழமை தெரிவித்த விவரம்: இந்தியாவில் பிஸ்கட் சந்தையின் மதிப்பு சுமார் ரூ. 25,000 கோடியாகும். பிரீமியம் வகை பிஸ்கட் சந்தை ஆண்டுக்கு 20 சதவீத அளவு வளர்ச்சியைக் கண்டு வருகிறது. தற்போது சாதாரண ரக பிஸ்கட் சந்தையில் குறிப்பிடும்படியான வளர்ச்சி இல்லை. எனவே, உயர் ரக பிஸ்கட் விற்பனையில் கூடுதல் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளோம். நாட்டின் பிஸ்கட் சந்தையில் பார்லே நிறுவனத்துக்கு 35 சதவீதப் பங்கு உள்ளது. உயர் ரக பிஸ்கட் விற்பனையில் மட்டும் 15 சதவீத இடத்தைப்

பிடிக்கத் திட்டமிட்டுள்ளோம். பார்லேயின் சாதாரண ரக பிஸ்கட் பிராண்டுகள் பார்லே-ஜி, பார்லே மாரி, கிராக்ஜாக், மோனேகோ உள்ளிட்டவை. பிரீமியம் வகையில் மிலானோ, ஸிம்ப்ளி குட், ஹாப்பி, ஹைட் அண்ட் ஸீக் ஆகியவை. ஒவ்வொரு பிராண்டையும் விற்பனை செய்யப் புதிய விற்பனை, விநியோக முறைகளைக் கையாளவுள்ளோம். புதிய பிராண்டுகளை அறிமுகம் செய்வதைவிட, ஏற்கெனவே நன்றாக விற்பனையாகும் பொருள்களின் விநியோகம், விற்பனையை செம்மைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம் என்று அவர் கூறினார்.

**2635 டன் யூரியா வருகை**

டெல்டா மாவட்டங்களில் யூரியா தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக ஓமன் நாட்டிலருந்து 2635 டன் யூரியா தஞ்சை மாவட்டத்திற்கு வியாழக்கிழமை ரயில் மூலம் வந்தது.தஞ்சை மாவட்டத்தில் யூரியா உரம் தனியார் உர வியாபாரிகளால் பதுக்கி வைத்து விற்கப்படுவதாகப் புகார்கள் வருகின்றன. இந்நிலையில் யூரியா தட்டுப்பாட்டை போக்க ஓமன் நாட்டிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்கு யூரியா வந்தது. கிரிப்கோ நிறுவனம் மூலம் 2635 டன் யூரியா ரயில் வேகன்களில் தஞ்சை மற்றும் கும்பகோணத்திற்கு வந்துள்ளது.கும்பகோணத்திற்கு 21 ரயில் வேகன் மூலம் 1327 டன்னும், தஞ்சை ரயில் நிலையத்திற்கு 21 வேகன் மூலம் 1308 டன்னும் யூரியா வந்துள்ளதை, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் துணைப் பதிவாளர் ஆத்மநாதன் பெற்றுக்கொண்டு, தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு நூற்றுக்கணக்கான லாரிகள் மூலம் அனுப்பினார்.அதே போல் தஞ்சாவூர், திருவாரூர், நாகை, அரியலூர் மாவட்டங்களில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்களுக்காக டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் ஆகிய உரங்கள் 1333 டன் தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்திலிருந்து கும்பகோணம் ரயில்

நிலையத்திற்கு வந்தது. இவை தனியார் உர விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**தஞ்சாவூரில் தென்னை வாரிய மண்டல அலுவலகம் அமைக்க வலியுறுத்தல்**

தஞ்சாவூரில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் மண்டல அலுவலகம் அமைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்களவையில் தஞ்சாவூர் தொகுதி உறுப்பினர் கு. பரசுராமன் அண்மையில் வலியுறுத்தினார்.இதுதொடர்பாக மக்களவையில் அண்மையில் பரசுராமன் பேசியதாக அவரது அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தென்னை சார்ந்த தொழில்கள் மூலம் 8,300 மில்லியன் ரூபாய் வருவாய் நம் நாட்டுக்குக் கிடைக்கிறது. மேலும் அந்நியச் செலாவணி மூலம் ஆண்டுக்கு 13,000 மில்லியன் ரூபாய் கிடைத்து வருகிறது.இந்தியாவில் தென்னை மரங்கள் அதிகமாக கேரளத்தில் இருந்தாலும், தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 3,89,900 ஹெக்டேர் பரப்பளவில் 7.2 கோடி மரங்கள் மூலம் 5,362 மில்லியன் தேங்காய் உற்பத்தியாகிறது. அதிலும் தமிழகத்தில் உள்ள தென்னை உற்பத்தி அதிகளவில் உள்ள 3 மாவட்டங்களில் எனது சொந்த மாவட்டமான தஞ்சாவூர் மாவட்டம் சிறப்பான இடத்தில் உள்ளது.தென்னை வளர்ச்சி வாரியத்தின் தலைமையகம் கேரள மாநிலம் கொச்சியில் உள்ளது. தமிழகத்தில் அதன் மண்டல அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. ஆனால் மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் பல்வேறு திட்டங்களும், சலுகைகளும் தென்னக விவசாயிகளுக்கு சென்றடைவதில்லை.

அவர்கள் பல்வேறு வகையிலும் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படுகின்றனர். எனவே தென்னை விவசாயிகள் அதிகமுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் மத்திய தென்னை வளர்ச்சி வாரியத்தின் மண்டல அலுவலகத்தை தஞ்சாவூரில் அமைத்தால்தான், தென்னை

வளர்ச்சி வாரியத்தின் திட்டங்களையும், சலுகைகளையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு பயனடைய முடியும்.

**கொருக்கையில் மே 9-ல் உம்பளச்சேரி இன கால்நடைக் கண்காட்சி**

கொருக்கையில் மே 9-ல் உம்பளச்சேரி இனக் கால்நடைக் கண்காட்சி நடைபெறவுள்ளது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: திருத்துறைப்பூண்டி அருகே கொருக்கை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மே 9 காலை 9 மணிக்கு நடைபெறும் கண்காட்சியில் பங்கேற்கும் உம்பளச்சேரி இன தனித்தன்மை மாறாத சிறந்த காளை மாடு மற்றும் சிறந்த பசுவினங்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட உள்ளது. முதற் பரிசு ரூ. 20,000 இரு நபர்களுக்கும், 2-ம் பரிசு ரூ. 10,000 4 பேருக்கும், 3-ம் பரிசு ரூ. 5,000 8 பேருக்கும் ஆறுதல் பரிசாக தலா ரூ. 2,500 வீதம் 12 பேருக்கு வழங்கப்படுகிறது. விவசாயி கள், கால்நடை வளர்ப்போர் தங்களிடம் உள்ள உம்பளச்சேரி இன கால்ந டைகளை கண்காட்சி நடக்கும் நாளன்று காலை 6 முதல் 8 மணிக்குள் அழைத்து வந்து பதிந்து பயன்பெறலாம்.

**மீனவர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம்**

கடல் வளத்தையும், மீன்வர்களின் வாழ்வாதரத்தையும் பாதிக்கும் அளவிற்கு டாக்டர் மீனாகுமாரி மத்திய அரசுக்கு அறிக்கை அளித்திருப்பதாகவும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மீனவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு மீன்பிடித் தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாம் ராமேசுவரத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. ராமேசுவரம் லட்சுமணர்தீர்த்தம் அருகிலுள்ள பைடக் மஹாலில் நடைபெற்ற முகாமிற்கு அமைப்பின் மாநிலத்தலைவர் செலஸ்டின் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் சி.ஆர். செந்தில்வேல், ராமாநாதபும் மாவட்டச் செயலாளர் கருணாமூர்த்தி உள்பட மாநில, மாவட்ட, வட்டார நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வைக்கோல் விற்க விரும்பும் விவசாயிகள் கவனத்துக்கு...**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உலர் தீவனம் (வைக்கோல்) விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் கால்நடைத் துறைக்கு விற்பனை செய்து பயன் பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார். திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை, போளூர், புதுப்பாளையம் ஆகிய 3 இடங்களில் உலர் தீவன (வைக்கோல்) விற்பனை மையங்கள் அமைக்கப்படுகின்றன. இந்த மூன்று தீவனக் கிடங்குகளுக்கு தனித்தனியே உலர்ந்த வைக்கோல் வாங்கி 21 கிலோ கட்டுகளாகக் கட்டி வண்டியில் ஏற்றி, குறிப்பிட்ட இடங்களில் இறக்கி, அடுக்கி போர் போட்டுத் தர வேண்டும்.

இதேபோல, வாரம் தோறும் என 2 மாதங்களுக்கு வைக்கோல் வழங்க வேண்டும். இவ்வாறு தீவனக் கிடங்குகளுக்கு வைக்கோல் விற்பனை செய்யும் விவசாயிகள், வைக்கோல் வியாபாரிகள் தங்களது அனைத்துச் செலவினங்களை உள்ளடக்கிய விலைப் புள்ளியை கால்நடைத் துறையில் வழங்கலாம். தரமான வைக்கோல் விநியோகம் செய்யப்பட வேண்டும். தரமில்லாத வைக்கோல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள் 7 நாள்களுக்குள் வைக்கோல் விநியோகம் செய்ய வேண்டும். எனவே, விருப்பமுள்ள விவசாயிகள், வைக்கோல் வியாபாரிகள் மே 11-ஆம் தேதி பகல் 12 மணிக்குள் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு சாலையில் உள்ள கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் தங்களது மூடி முத்திரையிடப்பட்ட விலைப் பட்டியலைக் கொடுக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு 9445001119, 9751257992, 9443308454 என்ற எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார்.